கிராம அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாணம்
ග්‍රාම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු පළාත
DEPARTMENT OF RURAL DEVELOPMENT
NORTHERN PROVINCE

உமது இல. / ඔබේ අංකය / Your No.

எனது இல. / මගේ අංකය / My No. NP/19/11/Dept/Cir

29.03.2016

சுற்றுநிருபம் : இல :- 03/2016 கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணம்.

சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமானது.

எமது திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்படும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களினால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த வேலைகளை நடைமுறைப்படுத்தலில் தேசிய பெறுகை வழிகாட்டலிற்கு மேலதிகமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.

1. ஒப்பந்த வேலைகளை சங்கங்கள் நடைமுறைப்படுத்துவது சங்கத்தினது முன்னேற்றத்திற்கும், தமது பிரதேசத்தினை தாமே அபிவிருத்தி செய்வது என்ற உரித்துடைமையை சங்கத்திற்கு ஏற்படுத்துவதற்குமாகும்.

2. ஒப்பந்த வேலைகளை சங்கங்களினூடாக நடைமுறைப்படுத்தும் பொழுது யாப்பினடிப்படையில் ஒப்பந்த மொத்த தொகையில் 5% மான தொகை சங்கத்தின் வளர்ச்சிக்கான நிர்வாக நிதியாக சங்கங்களுக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்.
   அத்தியாவசியமான நிலைமைகளில் மட்டுமே இவ் 5% மான தொகையை அபிவிருத்தி திட்டத்திற்கு முழுமையாக பயன்படுத்த உரிய நியாயப்படுத்தலுடன் எழுத்து மூலம் பணிப்பாளரின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. சங்கங்கள் தமது பிரதேச செயலக பிரிவின் எல்லைக்கு அப்பால் எந்தவொரு பிரதேச செயலக பிரிவிலும் ஒப்பந்த வேலைகளையும் மேற்கொள்ள முடியாது.

4. குறிப்பிட்ட ஒரே சங்கத்திற்கு ஒப்பந்த வேலைகளை வழங்காது ஒப்பந்த வேலையை திறமையாக முன்னெடுக்க கூடிய சங்கங்களிற்கு பகிர்ந்து வழங்குவதன் மூலம் வேலைகளை விரைவாகவும், வினைத்திறனாகவும் நிறைவேற்ற முடியும் என்பதுடன் குறித்த சங்கங்களின் வளர்ச்சியையும் மேம்படுத்த முடியும்.

5. ஒப்பந்த வேலைகள் பூரணப்படுத்தப்பட்டு, கையளிக்கப்பட்டும் வரை அது தொடர்பான ஆவணங்கள் , செயற்பாடுகளுக்கு சங்கமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.

අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෙප්පන්ති. නල්ලූර්. යාපනය

No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail nprural@gmail.com

கிராம அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாணம்
ග්‍රාම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු පළාත
DEPARTMENT OF RURAL DEVELOPMENT
NORTHERN PROVINCE

உமது இல. / ඔබේ අංකය / Your No.

எனது இல. / මගේ අංකය / My No. NP/19/11/Dept/Cir

6. ஒப்பந்தகள் யாவும் உரிய நடைமுறைகளுக்குகேற்ப (சங்கத்தெரிவு, அனுமதி, பணவிடுவிப்பு, கண்காணிப்பு) செயற்படுவதை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உறுதிசெய்து கொள்ளவேண்டும் இதற்கான முழுப்பொறுப்பும் அவருக்கே உரித்தானது.
7. ஒப்பந்த வேலைகளின் போது அவை தொடர்பான உரிய பதிவுகளை கிரமமாக பேணுவதுடன் கிராம அபிருத்தி உத்தியோத்தர்கள் உரிய கண்காணிப்பு மூலம் முன்னேற்றங்களின் சிறப்பான அடைவு மட்டத்தினை உறுதி செய்தல் வேண்டும்.
8. சங்கங்களால் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த வேலைகளின் சுருக்க அறிக்கை பிரதியினை (Summary Report) தங்களது மாதாந்த நாட்குறிப்பு பிரித்தெடுப்புடன் (Monthly Diary Extract of Advanced Programme) இணைத்து ஒவ்வொரு மாதம் முடிவிலும் அனுப்பிவைத்தல் வேண்டும். (மாதிரி படிவம் இணைக்கப்பட்டுள்ளது)

ஜே.ஜே.சி.பெலிசியன்
பணிப்பாளர்
கிராம அபிவிருத்தி
வடக்கு மாகாணம்

ஜே.ஜே.சி. பெலிசியன்
பணிப்பாளர்
கிராம அபிவிருத்தித் திணைக்களம்
வடக்கு மாகாணம்.

பிரதி

1. செயலாளர், மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப, கிராம அபிவிருத்தி,வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு,வடக்கு மாகாணம்.
   - **தயவுடன் தங்களின் தகவலுக்காக.**
2. அரசாங்க அதிபர்.....
   - **தயவுடன் தங்களின் தகவலுக்காக**
3. பிரதேச செயலாளர்.....
   - **தயவுடன் தங்களின் தகவலுக்காக**
4. மாவட்ட கிராம அபிருத்தி உத்தியோகத்தர் - **நடைமுறைப்படுத்துவதற்காக**

இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෙප්පන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna
பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail nprural@gmail.com